திரு. கே. ஆர். ஞானசம்பந்தம் : ஐயா, 30 ஸ்டாண்டர்ட் எக்கர் என்று வரம்பு கட்டியதனுல் அதிக நிலங்கள் கிடைக்கவில்லை என்ற காரணத்தினுல், அதை 20 ஸ்டாண்டர்ட் எக்கராகக் குறைத்து, விதிவிலக்கு களை ரத்து செய்து கோவில், மடங்களுக்குச் சொந்தமான நிலங்களையும் இந்தச் சட்ட வரம்புக்குள் கொண்டு வருவார்களா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : நில உச்சவரம்புச் சட்டம் இன்னும் எப்படி எல்லாம் திருத்தப்பட வேண்டுமென்று நாம் முன் கூட்டிப் பேசிக்கொண்டிருப்பது அப்படிப்பட்ட சட்டங்களில் இருந்து மக்கள் தப்புவதற்கு யோசனை சொல்வதாக அமைந்துவிடும்.

திரு. வி. கே.கோதண்டராமன் : திருத்தப்படுவதை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். அதே நேரத்தில் மடங்களுக்கும், கோவில்களுக்கும் உச்ச வரம்புச் சட்டம் பொருந்தாதா ? அவர்கள் ஹைக்கோர்ட் வரையில் சென்று அந்த வழக்கின் தீர்ப்பு அடிப்படையில் அந்த நிலங்களுக்கு உச்ச வரம்புச் சட்டம் வரவில்லையா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மடங்கள் முதலியவற்றின் விவகாரத்தில 'Madras Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Act, 1961' விதியின் கீழ் இப்போது 20 எக்கரா வுக்கு மேல் நிலம் இருந்தால் 'the trustee of the Public Trust shall lease out the lands in such excess to—

(i) a co-operative farming society ; or

(ii) any person who is already a cultivating tenant : or

(iii) any person who not being already a cultivating tenant. executes an agreement with the public trust that he will contribute his own physical labour or that of any member of his family in the cultivation of the land so leased out to him . . . , (கொடுத்து வருகிறுர்கள்). ஆகவே, அவை தர்ம ஸ்தாபனங்களின் சட்டப்படி விதிவிலக்குப் பெற்று விடுகின்றன. அதுபற்றி சட்ட சம்பந்த மாகத்தான் ஆலோசனை செய்யவேண்டும்.

வீட்டுக்கு உச்சவரம்பு நிர்ணயம்

*311 வினு—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய உணவு-வருவாய்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதி லளிப்பாரா—

(அ) வீட்டுக்கு உச்சவரம்பு நிர்ணயிக்கும் பொருட்டு சட்டம் கொண்டு வரும் உத்தேசமுண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) தற்சமயம் (at present) இல்லை.

(இ) இவ் வினுவிற்கு இடமில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : தற்சமயம் இல்லை என்று சொன் ஞுலும் மற்ற நிலத்திற்கோ, மற்றவைகளுக்கோ உச்சவரம்பு கொடுத்துக் கொண்டு வரக்கூடிய நேரத்தில் வீடுகளைக் கட்டி, வாடகைக்கு விட்டு, கொள்ளை லாபம் அடிக்கக்கூடிய அளவில் நிலைமை வளர்ந்து வருகிறது அல்லவா ? ஆகவே உடனடியாக, கண்டிப்பாக வீடுகளுக்கும் உச்சவரம்பு கட்ட ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : தற்சமயம் இல்லை என்று அளிக்கப்பட்ட பதிலிலேயே, எதிர்காலத்தில் இருக்கலாம் என்ற பதில் தொக்கியிருக்கிறது.